வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பொதுப் பணித் துறையிடம் அதற்குத் தேவையான மதிப்பீட்டு அறிக்கைகள் கேட்கப்பட்டுள்ளன. பொதுப் பணித் துறையிலிருந்து அதற்குண்டான மதிப்பீட்டு அறிக்கை உடனடியாக வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு இதனை எடுத்துச்சென்று, வேகமாக அந்தக் கட்டடப் பணிகள் முடித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 314, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

314—

தரம் உயர்த்துதல்

***37798—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டம், ஆயக்காரன்புலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் வசதி கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படவேண்டும் என்ற நியதியில், அவை தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆயக்காரன்புலம் கூடுதல் ஆரம்ப

சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவம் எங்கள் அம்மா, ஆட்சி புரியும் திறம் எங்கள் அம்மா! தமிழ்நாட்டின் தனிப்பேரொளி எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் ஒரே விடியல் எங்கள் அம்மா! சமூக நீதியின் சன்னிதானம் எங்கள் அம்மா! தென்னாட்டின் திருக்கோயில் எங்கள் அம்மா! கருணைப் பெருங்கடல் எங்கள் அம்மா! வீரத்தின் விளைநிலம் எங்கள் அம்மா! கல்வி நிலையங்களின் கடவுள் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

வேதாரண்யம் நகரைச் சுற்றி மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதைக் கண்டறிந்து, அதைச் சரிசெய்ய 33 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதியை விதி 110-ன்கீழ் வாரி வழங்கியிருக்கின்றார்கள். வெள்ளப்பள்ளம் மீனவ மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கரியாப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்றியமைத்துக் கொடுத்ததற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைத் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் காணிக்கையாக்குகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்காரன்புலத்தில் உள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் வசதிகொண்ட மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன்.

2014 ஆகஸ்ட் 1]

ஆயக்காரன்புலம் 1, 2, 3 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்களும், பஞ்சநதிக்குளம், நடுச்சேத்தி, கடில்வயல், கருப்பம்புலம், ஆதனூர் ஊராட்சிகளைச் சேர்ந்த சுமார் 31,640-க்கும் மேற்பட்ட மக்களும் மருத்துவ வசதி பெற இது ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளித்தல்

(அ) புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்கு கட்டட மற்றும் விடுதி வசதி, உதவிப் பேராசிரியர் பணியிடங்களை நிரப்புதல், மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டை வளப்படுத்துவதிலும், மக்களை மேம்படுத்துவதிலும், அறிவு சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது உயர் கல்வி என்பதைக் கருத்திற்கொண்டு, உயர் கல்வியை அனைத்துத் தரப்பினரும் கற்பதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.